DEPOSITION OF WITNESS

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, PANRUTI.

M.C. No.5/2021

Deposition of Witness : PW1

| Name | அனிதா | Taluk | |
|---|---|---|---|
| Husband's Name | ராஜாராம் | Caste | |
| Village | பேர்பெரியான்குப்பம் | Calling | |
| Age | | Religion | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of day of **10.01.2024.** | | | |

**குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி**

என்ன பரிகாரம் கேட்டு இவ்வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் எனக்கும் என் குழந்தைக்கும் ஜீவனாம்சம் கேட்டு இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் தற்போது வேலை எதுவும் செய்யவில்லை. கீழ்காங்கேயன்குப்பத்தில் என் அப்பா வீட்டில் இருக்கிறேன். நான் பி.இ.பட்டதாரி என்றால் சரிதான். நான் திருமணத்திற்கு முன்பு டி.சி.எஸ் நிறுவனத்தில் வேலை செய்தேன் என்றால் இல்லை. நான் திருமணத்திற்கு பின்னர் சி.எம்.சி. நிறுவனத்தில் வேலை செய்தேன். அதன் பின்னர் அத்தினா ெஹல்த் கேர் நிறுவனத்தில் வேலை செய்தேன். அத்தினா ெஹல்த் கேர் நிறுவனத்தில் மாதம் ரூ.18 ஆயிரம் சம்பளம் பெற்று வந்தேன். நான் அத்தினா ஹெல்த் கேர் நிறுவனத்தில் இருந்து 2021 ம் ஆண்டு டிசம்பர் மாதம் ராஜினாமா செய்தேன்.

இந்த வழக்கை 29.01.2021 அன்று தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அதன்பின்னர் 12 மாதங்கள் கழித்து வேலையை ராஜினாமா செய்தேன் என்றால் சரிதான். நான் எதிர்மனுதாரிடம் இருந்து ஜீவனாம்சம் பெறுவதற்காகவே வேலையை ராஜினாமா செய்தேன் என்றால் சரியல்ல. நான் தற்போதும் எதிர்மனுதாரருக்கு தெரியாமல் வேறு நிறுவனத்தில் வேலை செய்கிறேன் என்றும், வழக்கிற்காக வேலை செய்யவில்லை என்றும் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் மனுதாக்கல் செய்தபோது வேலை செய்து வந்ததால் எதிர்மனுதாரர் என்னை பராமரிக்க வேண்டிய அவசியமில்லை என்றால் சரியல்ல.

நான் எதிர்மனுதாரருக்கு எதிராக கடலூர் சமூக நல அலுவலரிடம் வரதட்சனை கொடுமை புகார் கொடுத்திருந்தேன் என்றால் சரிதான். அந்த புகாரை எந்தவித முகாந்திரம் இல்லை என்று 25.04.2019 அன்று முடிக்கப்பட்ட விவரம் தெரியுமா என்றால் எனக்கு

தெரியாது. அதனை பின்னிட்டு 28.10.2020 அன்று எதிர்மனுதாருக்கு எதிராக குற்ற புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். அந்த புகாரின் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு எதிர்மனுதாரரை கைது செய்து சிறையில் அனுப்பப்பட்டார் என்றால் சரிதான். அவ்வாறு எதிர்மனுதாரர் சிறையில் அனுப்பப்பட்ட விவரத்தை நான் எதிர்மனுதாரர் வேலை செய்து வந்த ராம்கோ சிமெண்ட் நிறுவனத்திற்கு தகவல் கொடுத்தேன் என்றால் இல்லை. அவ்வாறு எதிர்மனுதாரர் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு சிறைக்கு சென்றதால் எதிர்மனுதாரரை ராம்கோ நிறுவனத்தில் இருந்து நீக்கிவிட்டார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் சரியல்ல. இன்றையதேதியிலும் அவர் வேலைக்கு சென்று வருகிறார்.

எதிர்மனுதாரர் தற்போது வேலை செய்து வருகிறார் என்பதற்கு ஆதாரமாக ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்யவில்லை. எதிர்மனுதாரர் ராம்கோ நிறுவனத்தில் வேலை செய்யவில்லை என்றும், தற்போது எந்த வேலையும் செய்யாமல் அவர் கஷ்ட ஜீவனம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. நான் இதுவரை தற்கொலை முயற்சி செய்யவில்லை. நான் இதுவரை 4 முறை விஷ மருந்து குடித்து தற்கொலை முயற்சி செய்தேன் என்றால் சரியல்ல. கடைசியாக தற்கொலை முயற்சி செய்தபோது பேர்பெரியான்குப்பத்தில் இருக்கும் தண்டபாணி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று பிழைத்தேன் என்றால் சரியல்ல. நான் பிடிவாத குணம் பிடித்தவர் என்றும், நினைத்த காரியம் நடக்க என்ன காரியம் வேண்டும் என்றாலும் செய்வேன் என்றால் சரியல்ல. நான் அடிக்கடி விஷம் குடித்து எதிர்மனுதாரரை மிரட்டி வந்ததால் எதிர்மனுதாரர் விவாகரத்து கோரி மனு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

நான் எனது குழந்தைக்கு எதற்காக மாதம் ரூ.5000 கேட்டுள்ளேன் என்று மனுவில் சொல்லவில்லை என்றால் மனுவில் சொல்லவில்லை. குழந்தை நெய்வேலி மகரிஷி வித்யாலயா பள்ளியில் படித்து வருகிறார். படிப்பிற்கு வருடம் ரூ.60 ஆயிரம் கட்டணம் செலுத்துகிறேன். குழந்தை பள்ளியில் சேர்ப்பதற்கு முன்னர் எதிர்மனுதாரரிடம் அனுமதி கேட்டேன் என்றால் எனது கணவரின் பங்காளி மூலமாக எதிர்மனுதாரரிடம் கேட்டபோது அவருக்கு எதுவும் தெரியாது என்று சொல்லிவிட்டார். நான் வேண்டுமென்றே எதிர்மனுதாரர் அனுமதி இல்லாமல் அதிக கட்டணம் வசூலிக்கும் பள்ளியில் சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல.

நான் இந்த மனுவில் எனது மகளை மனுதாரராக காட்டி மனு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மனுதாரராக இல்லாத ஒரு நபருக்கு பராமரிப்பு தொகை கோர முடியாது என்றால் சரியல்ல. எனது மகளை பராமரிப்பதற்கு குறைந்த செலவே போதும் என்றும்

வேண்டுமென்றே அதிக கட்டணம் வசூலிக்கும் பள்ளியில் சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் ரகசியமாக வேலை பார்த்து தான் பள்ளி கட்டணம் செலுத்துகிறேன் என்றால் சரியல்ல. நான் எதிர்மனுதாரரிடம் பராமரிப்பு தொகை கேட்க வேண்டிய அவசியம் இல்லை என்றும், எதிர்மனுதாரரை மிரட்டி பணிய வைப்பதற்காக இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

மனுவில் எதிர்மனுதாரர் குடிகாரர் என்றும், அவருக்கு வேறு பெண்களுடன் தொடர்பு இருப்பதாக சொல்லியுள்ளேன் என்றால் சொல்லியுள்ளேன். அவ்வாறு சொல்லியுள்ளபோது ஏன் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ ஆசைப்படுகிறேன் என்றால் எனக்கு எதிர்மனுதாரரை தவிர இன்னொரு வாழ்க்கை இல்லை. எனக்கு மகளும் இருக்கிறார் அதனால் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ ஆசைப்படுகிறேன். நான் சொல்வது பொய் என்றும் எதிர்மனுதாரருக்கு குடிப்பழக்கம் இல்லை என்றும், வேறு எந்த தொடர்பும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

எதிர்மனுதாரருக்கு 3 ஏக்கர் நிலம் சொந்தமாக இருக்கிறது என்று சொல்லியுள்ளபோது சொல்லியுள்ள ஆவணம் தாக்கல் செய்துள்ளேன். எதிர்மனுதாரர் குடும்பத்திற்கே உரிய 1 ஏக்கர் 25 செண்ட் நிலம் உள்ளது என்றும், அந்த நிலத்திற்கு பாகம் கோரி நான் அசல் வழக்கு எண். 488/2020 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி 1 ஏக்கர் 25 செண்ட் நிலமும் விளை நிலம் இல்லை என்றும், மனையாக தான் உள்ளது என்று சொன்னால் ஒரு இடத்தில் 11 செண்ட் மனை உள்ளது, 3 இடங்களில் தோப்புகள் உள்ளது.

மனுவில் சீர்வரிசை பொருட்களை திரும்ப கொடுக்கவேண்டும் என்று கேட்டுள்ளேன் என்றால் சரிதான். எனது வாழ்வாதாரத்திற்காக கேட்டுள்ளேன். எனக்கு எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ விருப்பமில்லை என்றும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் மனு தாக்கல் செய்தபோது சம்பளம் பெற்று வந்தேன் என்றும், பின்னர் வேண்டுமென்றே வேலையை விட்டு வந்ததால் எதிர்மனுதாரர் என்னை பராமரிக்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. எனது மகள் கமலினி இவ்வழக்கில் மனுதாரராக இல்லாதபோது எதிர்மனுதாரர் அவருக்கு ஜீவனாம்சம் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. நான் பொய் புகார் கொடுத்து எதிர்மனுதாரரை சிறையில் அடைத்ததால் வேலையை இழந்து தற்போது எந்த வேலையும் இல்லாமல் கஷ்ட ஜீவனம் செய்து வருவதால் என்னை பராமரிக்க முடியாது என்றால் சரியல்ல. அதனால் இந்த மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.